# இன்பத்தமிழ்

சொல்லும் பொருளும்
நிருமித்த - உருவாக்கிய விளைவு - வளர்ச்சி
சமூகம் - மக்கள் குழு
அசதி - சோர்வு

இயற்பெயர்- சுப்புரத்தினம்

சிறப்பு பெயர்:

(அறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியால் ரூ. **25000** பொற்கிழியும் புரட்சிக் கவிஞர் என்ற விருதும் **1946**-இல் பெற்றார். )

- புரட்சிக்கவி
- பாவேந்தர்
- புதுவைக்குயில்
- பகுத்தறிவு கவிஞர்
- தமிழ்நாட்டு இரசுல் கம்சதேவ்
- இயற்க்கை கவிஞர்

பெற்றோர்

கனகசபை- இலக்குமி அம்மையார்

பிறந்த ஊர்

புதுச்சேரி

காலம்

29.4.1891 – 21.4.1964

நூல்கள்

- குடும்ப விளக்கு
- பாண்டியன் பரிசு
- அழகின் சிரிப்பு
- இருண்ட வீடு
- தமிழியக்கம்
- சேர தாண்டவம்,
- தமிழச்சியின் கத்தி.
- பிசிராந்தையார்
- சஞ்சீவி பருவத்தின் சாரல்

- குறிஞ்சித்திட்டு.

இதழ்
- குயில்

சாகித்திய அகாதெமி விருது -
பிசிராந்தையார் (நாடக நூல்)1969

- *1982*-ல் இவரது பெயரில் திருச்சியில் "பாரதிதாசன் பல்கலைகழகத்தை" உருவாக்கியுள்ளது.
- புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக, *1954*-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
- பாரதிதாசன் எழுதிய இந்த படல் புதுச்சேரியின் மாநிலப் பாடல் ஆகும்.

  "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

  "எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம்"

  "புதியதோர் உலகம் செய்வோம்"

  "தமிழுக்கு தொண்டு செய்வோர் சாவதில்லை "

  "இருட்டறையில் உள்ளதடா உலகம்"

சமூகத்தின் விளைவுக்கு - நீர்
வாழ்வுக்கு - ஊர்
இளமைக்கு - பால்
புலவர்க்கு - வேல்
அசதிக்கு - தேன்.
அறிவுக்கு - தோள்
கவிதைக்கு - வாள்

தமிழே உயிரே வணக்கம்
தாய்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்
அமிழ்தே நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்
தமிழே உன்னை நினைக்கும்
தமிழன் என் நெஞ்ச ம் இனிக்கும் இனிக்கும்
- காசி ஆனந்தன்

# தமிழ்க்கும்மி

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!
–பெருஞ்சித்திரனார்

- பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் -துரை-மாணிக்கம்
- சிறப்புப் பெயர் - பாவலரேறு (பாவாணர் அவர்கள், ***1973-***இல் *"*பாவலரேறு*"*) என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்.
- பிறந்த ஊர்: சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்
- பெற்றோர்: துரைசாமி, குஞ்சம்மாள்

நூல்கள் -

- கனிச்சாறு,
- ஐயை
- கொய்யாக்கனி (பள்ளிப் பருவத்திலேயே “மல்லிகை”, பூக்காரி” என்னும் பாவியங்களை இயற்றினார், பாரதிதாசன் தம் அச்சகத்திலேயே “கொய்யாக்கனி” என்னும் பெயரில் பெருஞ்சித்திரனாரின் பாவியங்களை அச்சிட்டுத் தந்தார்)
- பாவியக்கொத்து
- நூறாசிரியம்
- பள்ளிபறவைகள்
- இளமை விடியல்
- உலகியல் நூறு
- மகபுகு வஞ்சி
- எண்சுவை எண்பது.
- இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந் துள்ளது.

இதழ்கள்:

தென்மொழி, தமிழ்ச் சிட்டு, தமிழ் நிலம்




- பாவாணரின் விருப்பப்படி, தென்மொழி என்னும் இதழைப் பெருஞ்சித்திரனார் ***1959*** ஆம் ஆண்டு தொடங்கி நடத்தினார்.

- வேலூர் சிறையில் இருந்தபோது *"*ஐயை*"* என்னும் தனித் தமிழ்ப் பாவியத்தின் முதல் தொகுதியை எழுதினார்.

- வேலூர் சிறையில் இருந்து வெளிவந்த பின் *"*தமிழ்ச் சிட்டு*"* இதழைத் தொடங்கினார்.*(1960)*

- இறப்பு:***1995*** –ஆம் ஆண்டு, சூன் திங்கள் 11 ஆம் நாள்.62 ஆம் அகவையில் இறந்தார்

சொல்லும் பொருளும்

- ஊழி – நீண்டதொரு காலப்பகுதி
- உள்ளப்பூட்டு – உள்ளத்தின் அறியாமை
- ஆழிப் பெருக்கு - கட ல் கோள்
- மேதினி - உலகம்

## வளர்தமிழ்

- உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.

  *"*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
  இனிதாவது எங்கும் காணோம்*"* - பாரதியார்

  என்று பிறந்தவள் என்று உணராத
  இயல்பினளாம் எங்கள் தாய்*!* - பாரதியார்

- தொல்காப்பியம் தமிழில் நமக்குக்கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல்
- தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.
- வலஞ்சுழி எழுத்துகள் - அ, எ, ஔ, ண, ஞ
- இடஞ்சுழி எழுத்துகள் - ட , ய, ழ

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்ற |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய<br>இதுநீ கருதினை ஆயின |
| தமிழன் | அப்பர் தேவாரம் | தமிழன் கண்டாய் - திருத்தாண்டகம் |

- சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்.
- பாகற்காய் (பாகு + அல் + காய்)

பூ வின் ஏழு நிலை:

1. அரும்பு
2. மொட்டு
3. முகை
4. மலர்
5. அலர்
6. வீ
7. செம்மல்

'மா' – என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு.

இயல்தமிழ்: எண்ணத்தை வெளிப்படுத்தும் ;
இசைத்தமிழ் : உள்ளத்தை மகிழ்விக்கும்;
நாடகத்தமிழ்: உணர்வில் கலந்து வாழ்வின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டும்.

**தெரிந்து தெளிவோம்**

| தாவர இலைப் பெயர்கள் | |
|---|---|
| ஆல், அரசு, மா, பலா, வாழை | இலை |
| அகத்தி, பசலை, முருங்கை | கீரை |
| அருகு, கோரை | புல் |
| நெல், வரகு | தாள் |
| மல்லி | தழை |
| சப்பாத்திக் கள்ளி, தாழை | மடல் |
| கரும்பு, நாணல் | தோகை |
| பனை, தென்னை | ஓலை |
| கமுகு (பாக்கு) | கூந்தல் |

- மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் அது எண்களின் அடிப்படையில் வடிவமைக்கப்படவேண்டும்.

**தமிழ் எண்களை அறிவோம்.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0 |

## 2000 ஆண்டுகளாக வழக்கில் இருக்கும் தமிழ் சொற்கள்

தொல்காப்பியம்

- மகிழ்ச்சி
- முடி
- உலகம்
- ஊர்
- புகழ்
- அன்பு
- உயிர்
- செல்
- ஒழி

குறுந்தொகை

- பாம்பு
- முதலை
- மீன்
- செய்

அகநானூறு
- கோடை
- மருந்து

நற்றிணை
- உழவர்

கலித்தொகை
- வேளாண்மை(திருக்குறள்)

பதிற்றுப்பத்து
- வெள்ளம்

பெரும்பாணாற்றுபடை
- பார்

திருக்குறள்
- வேளாண்மை
- மகிழ்ச்சி
- அரசு

திருமுருகாற்றுப்படை
- உலகம்

## கனவு பலித்தது

- நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம் என்பது அறிவியல் உண்மை. தொல்காப்பியர் தமது தொல்காப்பியம் என்னும் நூலில் இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

**(நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்.**
**- தொல்காப்பியம்)**

- கடல் நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும் என்ற செய்தி
பழந்தமிழ் இலக்கியங்களான முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார்நாற்பது

திருப்பாவை முதலிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(“கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி”....
- கார்நாற்பது)

- திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது
என்ற அறிவியல் கருத்து
“ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி
-ஔவையார்”

- போர்க்களத்தில் மார்பில் புண்படுவது இயல்பு.
வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிறஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும்
நூலில் இடம்பெற்றுள்ளது.
“நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு.
-பதிற்றுப்பத்து”

- சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை,
நரம்பினால் தைத்த செய்தியும் நற்றிணை
என்னும் நூலில் காணப்படுகிறது.
கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடிமுதிர் பரதவர்
- நற்றிணை

- தொலை வில் உள்ள பொருளின்
உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும். அறிவியல் அறிஞர் கலீலியோ நிறுவிய கருத்து இது. இக்கருத்து திருவள்ளுவமாலை என்னும் நூலில் கபிலர் எழுதிய பாடலில் இடம்பெற்றுள்ளது.
“தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட பனையளவு காட்டும்
-திருவள்ளுவமாலை”

## சிலப்பதிகாரம்

- ஆத்திமலர் மாலையை அணிந்தவன் சோழமன்னன்.

இளங்கோவடிகள்:

- சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்
- சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர்
- காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

- இளங்கோவடிகளின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் நற்சோணை
- இவர்தம் தமையன் சேரன் செங்குட்டுவன்
- அங்கிருந்த மலைவாழ் மக்கள், "வேங்கை மரத்தின்கீழ் ஒரு பெண்தெய்வத்தைப் பார்த்தோம்" என்று கூற, உடனிருந்த பெரும்புலவர் சாத்தனார், "அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்" என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார்.
- அதனைக் கேட்ட இளங்கோவடிகள், "இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்" என்று கூறினார். சாத்தனாரும், **'அடிகள் நீரே அருளுக'** என்றார். இவ்வாறே சிலப்பதிகாரம் உருவாயிற்று.

சிலப்பதிகாரம்:

- புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெரும் காண்டங்களையும்
- முப்பது காதைகளையும் உடையது.

  புகார்க்காண்டம் **= 10**
  மதுரைக்காண்டம் **= 13**
  வஞ்சிக்காண்டம் **= 7**

- “உரையிடை இட்ட பாட்டுடைச்செய்யுள்” என அழைக்கப்படுகிறது.

- முதற் காப்பியம்
- முத்தமிழ்க் காப்பியம்
- குடிமக்கள் காப்பியம்
- ஒற்றுமைக் காப்பியம்
- நாடகக் காப்பியம்

ஐம்பெருங்காப்பியங்கள்:

1. சிலப்பதிகாரம்,
2. மணிமேகலை,
3. சீவகசிந்தாமணி,
4. வளையாபதி,
5. குண்டலகேசி.

ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையானது சிலப்பதிகாரம்

இரட்டைக் காப்பியங்கள் எனப்படும் நூல்கள் **-** சிலப்பதிகாரம், மணிமேகலை

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும்,
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்,
3. ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்"
   என்னும் முப்பெரும் உண்மைகளைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது. இக்காப்பியம்

மடக்கொடி- கண்ணகி
மடப்பிடி - பாஞ்சாலி
மடமொழி - கோப்பெருந்தேவி

கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்

கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

– இளங்கோவடிக

விதுரனைத் தூதுவிடல்

தம்பி விதுரனை மன்னன் அழைத்தான்
தக்க பரிசுகள் கொண்டினி தேகி
எம்பியின் மக்க ளிருந்தர சாளும்
இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்
"கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி அழைத்தனன் கௌரவர் கோமான்
நல்லதோர் நுந்தை" யெனவுரை செய்வா

காணி நிலம்

பாரதியார்:

- இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்
- இயற்பெயர் : சுப்பிரமணியன்
- சிறப்புப் பெயர்கள்: மகாகவி, தேசியக்கவி, விடுதலைக்கவி
- எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர் (11 வயதில்)
- பெற்றோர்: சின்னசாமி – இலக்குமி அம்மையார்
- காலம்: 11.12.1882 - 11.09.1921
- ஊர்: எட்டயபுரம்- தூத்துக்குடி மாவட்டம்
- முப்பெரும் கவிதை பாடல்கள்: குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு,
- உரைநடை இலக்கியங்கள்: ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு
- சிறுகதைகள்:
  சின்ன சங்கரன் கதை
  ஆறில் ஒரு பங்கு
  ஸ்வர்ணகுமாரி கதை

- பாட்டுக்கொரு புலவன் பாரதி – கவிமணி
- நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா –பாரதிதாசன்

## சிறகின் ஓசை

- பறவைகள் இடம் பெயர்தலை வலசை
  போதல் என்பர்
- உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் இவற்றிற்காகவே
  பறவைகள் இடம் பெயர்கின்றன.
- நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம் ஆகியவற்றை
  அடிப்படையாகக் கொணடே பறவைகள் இடம்பெயர்கின்றன.
- பொதுவாக வடக்கிலிருந்து
  தெற்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு
  நோக்கியும் பறவைகள் வலசை போகின்றன.

வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்:


1. தலையில் சிறகு வளர்தல்
2. இறகுகளின் நிறம் மாறுதல்
3. உடலில் கற்றையாக முடி வளர்தல்

- தமிழகத்திற்கு வெளிநாட்டுப் பறவைகள் வலசை வருவது பற்றி இலக்கியங்களிலும்
  செய்திகள் உள்ளன.
- ஏறத்தாழ **1500** ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சத்திமுத்தப்புலவர்
  "நாராய், நாராய், செங்கால் நாராய்" என்னும் பாடலை எழுதியுள்ளார் .
- அப்பாடலில் உள்ள
  "தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்" என்னும் அடிகள் பறவைகள் வலசை
  வந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.
- ஐரோப்பாவில் இருந்து தமிழகத்திற்குச் செங்கால் நாரைகள் வருவது தற்போதைய
  ஆய்விலும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.
- காக்கைகுருவி எங்கள் சாதி - பாரதியார்
- இந்தியாவின் பறவை மனிதர் **டாக்டர் சலீம் அலி.**
- தன் வாழ்க்கை
  வரலாற்று நூலுக்குச்
  **' சி ட் டு க் கு ரு வி யி ன்**
  **வீழ் ச் சி ' ( The fall of**
  **s p a r r o w )** எ ன் று
  பெயரிட்டுள்ளார்**.**
- மனிதன் இல்லாத உலகில் பறவைகள்
  வாழமுடியும்!
  பறவைகள் இல்லாத உலகில் மனிதன்
  வாழமுடியாது! - சலீம் அலி

- பறவை பற்றிய படிப்பு ஆர்னித்தாலஜி ***(ORNITHOLOGY)***
- உலகச் சிட்டுக்குருவிகள் நாள் மார்ச் ***– 20***




**தெரிந்து தெளிவோம்**



**கப்பல் பறவை**

சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை கப்பல் பறவை (Frigate bird). இது தரையிறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும். இது கப்பல் கூழைக்கடா, கடற்கொள்ளைப் பறவை என்றும் அழைக்கப்படுகிறது.

## கிழவனும் கடலும்

- **(The Oldman and the Sea**
- **1 9 5 4** ஆ ம் ஆ ண் டு நோபல் பரிசு பெற்றது. இந்நூலின் ஆசிரியர் எர்னெஸ்ட் ஹெமிங்வே**.**

## அறிவியல் ஆத்திசூடி

- ஆத்திசூடி என்பது அகர வரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம்.
- பாரதியார்- ’புதிய ஆத்திசூடி’
- நெல்லை சு.முத்து - அறிவியல் ஆத்திசூடி

- ”தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர்” என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் நெல்லை சு.முத்து

எதிர்ச்சொற்களைப் பொருத்துக.

**1.** அணுகு - விலகு
2. ஐயம் - தெளிவு
3. ஊக்கம் - சோர்வு
4. உண்மை - பொய்மை